இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி நிகழ்ச்சித்திட்டம்
இறுதிப் பரீட்சை – 2008
**ESP 2470** – ஆரம்பமட்ட தமிழ்மொழி
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

---

திகதி: 30.05.2008 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

---

எவையேனும் மூன்று(03) வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

01. (i) எண்ணக்கரு உருவாக்கம் பற்றி உளவியலாளர்களினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை எடுத்துரைக்க.

(ii) எண்ணக்கரு உருவாக்கத்தைப் பெற்றுள்ள மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகள் எவையெனக் குறிப்பிட்டு அவை தொடர்பாக சுருக்கமாக விளக்குக.

(iii) எண்ணக்கரு உருவாக்கத்தில் ஆசிரியரின் வகிபங்கினை மதிப்பிடுக.

02. (i) ஆக்கத்திறன் விருத்தி என்றால் என்ன? ஆக்கத்திறன் விருத்திக்கு மொழியாசிரியர் ஒருவர் எத்தகைய நடடிவக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை விபரிக்க.

(ii) ஆக்கத்திறன் விருத்திபெற்ற மாணவர்களிடம் எத்தகைய தேர்ச்சிகளை எதிர்பார்க்கலாம் என்பதை விபரிக்க.

(iii) வகுப்பு மாணவரின் ஆக்கத்திறன் விருத்தியில் பெற்றோரின் வகிபங்கினை ஆராய்க.

03. (i) "கற்றல், கற்பித்தல், கணிப்பீடு, மதிப்பீடு என்பன ஒன்றுடனொன்று தொடர்புடையன". இக் கூற்றினை விபரிக்க.

(ii) தரம் 5 மாணவரது மொழி கற்றல் தொடர்பான கணிப்பீடு, மற்றும் மதிப்பீட்டினைச் செய்ய 5 E மாதிரியை (5E model) எவ்வாறு பயன்படுத்துவீர்களௌள விளக்குக.

(iii) முறைசார்ந்த கணிப்பீடு, முறையில் கணிப்பீடு என்பதனால் நீங்கள் விளங்கிக் கொள்வதென்ன? தரம் 5இல் பயன்படுத்தக்கூடிய மொழி தொடர்பான முறையில் கணிப்பீடுகள் பற்றி விபரிக்க.

04. (i) நான்காம், ஐந்தாம் தரங்களில் தமிழ் இலக்கியம் கற்பிக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை ஆராய்க.

(ii) இலங்கையில் சிறுவர் இலக்கியத்தின் முன்னோடிகளாகக் குறிப்பிடக்கூடியவர்கள் யாவர்? சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் அவர்களது பங்களிப்பினை மதிப்பிடுக.

(iii) இலங்கையில் சிறுவர் இலக்கியம் வளர்ச்சி அடைய மேற்கொள்ளப்பட வேண்டிய காத்திரமாள நடவடிக்கைகள் மூன்றினை முன்வைக்க.

05. (i) அடிப்படை மொழித்திறன்களை ஆரம்ப வகுப்பு மாணவர்களிடையே வளர்ப்பதில் பாடநூல்களின் பயன்பாடுபற்றி ஆராய்க.

(ii) அடிப்படை மொழித்தின்களைக் கற்பிப்பதற்கு பயன்படுத்தப்பட வேண்டிய கற்பித்தல் சாதனங்கள் எவை எனக் குறிப்பிட்டு அவற்றின் பயன்பாட்டை விபரிக்க.

(iii) ஆரம்ப வகுப்பு மாணவர்களிடம் சுயகற்றலை மேம்படுத்த ஆசிரியர் என்ற வகையில் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை விபரிக்க.

06. பின்வருவனவற்றுள் எவையேனும் <u>மூன்று</u> பற்றி விளக்கி எழுதுக:

(i) மொழி கற்றல் தொடர்பாக நேரம் சொம்ஸ்சி, ஜெரோம் புருணர், விகொற்ஸ்கி ஆகியோர் முன்வைத்த கருத்துக்கள்.

(ii) ஆரம்பவகுப்புக்களில் ஒன்றிணைந்த பாடத்திட்டமும் மொழி கற்பித்தலில் அதன் பயன்பாடும்.

(iii) ஆரம்பவகுப்பு மாணவரது மொழி விருத்தியில் பரிகாரகற்பித்தலின் பங்கு.

(iv) மாணவரின் அனுமதிமட்ட கேட்டல் திறன்களை இனங்காணலும் பயன்படுத்தலும்.

(பதிப்புரிமையுடையது)